காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

23—4—72

★

உள்ளே......

முதல் கடமை -
அஃதுதான்!
(தலையங்கம்)

★

எல்லோரும்
இந்நாட்டு மன்னர் (5)
(டாக்டர் அறிஞர் அண்ணா)

★

காஞ்சி மாநாட்டில்
கழகத் தலைவர்கள்!
(மாநாட்டுப் பேச்சுக்கள்)

★

பெருத தாயைத்
தேடி...
(சிறுகதை)

விலை 25 காசு



மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் சிறு தொழில் ஊக்க நிறுவனத்தை முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார். விழாவிற்குத் தலைமைவகித்த பேரவைத் தலைவர், அமைச்சர் சிட்டிபாபு ஆகியோர் உடனிருக்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாடு:

கழகத்தை பிளவுபடுத்த யாராலும் இயலாது

பொய்யை விற்பனை செய்வோர் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். முழக்கம்!

"கழகத்தைப் பிளவுபடுத்த வேண்டும்—கழகத் தோழர்களிடையே பிளவை உண்டாக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்கிறார்கள்; அந்த முயற்சி பலிக்கப் போவதில்லை;

"தி. மு. கழகம் மக்கள் கட்சி—தனி மனிதர் கட்சி அல்ல; இதனை அண்ணா உருவாக்கினார்—கலைஞர் கட்டிக் காத்து வருகிறார்; கழகத்தைப் பிளவுப்படுத்த எவரும் இதுவரை பிறந்ததில்லை—இனியும் பிறக்கப் போவதில்லை; தொடர்ந்து கழகமே ஆட்சி செய்யும்"

—என்று கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் காஞ்சியில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 5-வது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:-

"கழகத் தோழர்களுக்கும்—கழகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள ஆதரவாளர்களுக்கும்—நம் மீது பற்றும் பாசமும் கொண்டுள்ள பொதுமக்களுக்கும்- வேண்டுகோள் ஒன்று விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையச் சூழ்நிலையில் நான் எதைச் சொன்னாலும் — எதைச் செய்தாலும்—அது அப்படியே சில பத்திரிகைகளில் வருவதில்லை—பொய்தான் வரும்; உண்மையைச் சொன்னால் அவர்களுக்கு வியாபாரம் ஆகாது—பொய்தான் சொல்வார்கள்; அதில்தான் அவர்களுடைய வியாபாரமே நடக்கிறது; உள்ளத்துப் பொருமைக்கு அமைதி ஏற்படுத்திக்கொள்வதற்காகவே அவர்கள் மக்களிடம் பொய்யைப் பரப்புவதில் முனைந்து நிற்கிறார்கள்.

'சமூக அரசின் நல்ல திட்டங்களை வரவேற்று எழுதினால், மக்களின் நல்லெண்ணம் நம் பக்கம் விழுந்து விடுமே' என்று பயப்படுகிறார்கள்.

8-4-72 மாலைப் பத்திரிகை ஒன்றில், 'செயற்குழுக் கூட்டம் முடிவதற்கு முன்பே — செயற்குழுவை விட்டு எம். ஜி. ஆர். வெளியேறி விட்ட மர்மம் என்ன' என்று செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

'செயற்குழு நடக்கிறது' என்றால் அதில் குறிப்பிட்டவர்களே கலந்து கொள்ள முடியும்; அந்தப் பத்திரிகைப் பிரதிநிதி அங்கே எப்படி வந்தார்? இதையெல்லாம் வெளியே சொல்ல கழகத்தவர் சிலரே காரணமாக இருக்கிறார்கள் —என்று சொல்லப்படுவதை நான் நம்பவில்லை; ஆனாலும் அந்தச் செய்தி எப்படி வந்தது?

அந்தச் செய்தியில் ஓரிடத்தில், 'எம். ஜி. ஆர். சோர்வாக இருந்தார்' என்று எழுதியிருக்கிறார்கள்; இன்னொரு இடத்தில், 'வேகமாக வெளியேறினார்' என்று எழுதியிருக்கிறார்கள்; சோர்வாக இருப்பவனால் எப்படி வேகமாக வெளியேற முடியும்?

'ஒரே பொய்யைப் பல முறை சொன்னால் உண்மை ஆகிவிடும்' என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்!

என்மீதும் — முதல்வர் கலைஞர் மீதும்—நாவலர்மீதும் பற்று வைத்துள்ள கழகத் தோழர்களே—உங்களுக்கெல்லாம் எங்கள் மீது சந்தேகம் உண்டாகவேண்டும் என்பதற்காகவே அவர்கள் இதைச் செய்கிறார்கள்; இதற்காகத்தான் அவர்களைப்பற்றி உங்களுக்குத் தெளிவுபடுத்த நேரிட்டது.

கழகம் பிளவுபட வேண்டும்—கழகத்தில் உள்ளவர்கள் இடையே பிளவு ஏற்பட வேண்டும்' என்கின்ற நைப்பாசையோடு நடத்தப்படுகின்ற அப்படிப்பட்ட ஏடுகளுக்கு கழகத்தோழர்கள் ஆதரவு அளிக்கக்கூடாது.

எம். ஜி. ஆர் வராதது ஏன்' என்கிறார்கள்; எம். ஜி. ஆர். ஒருவரை வைத்துக்கழகம் வளரவில்லை —வேறு எந்த ஒருவருக்காகவும் கழகம் இல்லை; அப்படி இருப்பதாலேதான், அண்ணா நம்மை விட்டுப் பிரிந்த பின்னர்கூடக் கழகம் இருக்கிறது.

அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்டது நமது கழகம்; அவருடைய கொள்கையின் மீதும்—இலட்சியங்களின் மீதும் பற்று வைத்துள்ள இலட்சோப லட்சம் மக்களை நம்பித்தான் கழகம் இருக்கிறது; இப்படிப்பட்ட கழகத்தில் தான் பூசலை உண்டாக்க நினைக்கிறார்கள்—பிளவை உண்டாக்கப் பார்க்கிறார்கள்—அது நடக்குமா?

அப்படியே ஏற்பட்டாலும் கூட, அதை எங்களுக்குள் தீர்த்துக் கொள்வோமே தவிர, அது சந்தைக்கு வராது—எங்களுக்குள் சச்சரவும் வராது! யாரானாலும் சரி—உண்மை பேச வேண்டும்! பொய் நீண்டநாள் நீடிக்காது!

திராவிட முன்னேற்றக் கழக அரசு சோஷலிச இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது; இந்தச் செயல் முறையைத் தடை செய்யத் துணைக்கண்டம் பேரரசின் மூலம் சிலர் முயற்சி செய்கிறார்கள்.

இவர்கள் அப்படி ஆசைப்படுகிறார்கள்; ஆனால், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரசுக் கட்சியினரே மாற்றுக் கட்சி உறுப்பினர்களை ஆதரித்து ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்.

இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில், இந்திரா காங்கிரசு வெற்றி பெற்றிருக்கிறது; அந்த வெற்றி நிரந்தரமான வெற்றியல்ல; 'தற்காலிகம்' என்பதையே இம்முறை நடைபெற்ற தேர்தல்கள் மெய்ப்பிக்கின்றன,

எங்கெல்லாம் இந்திரா காங்கிரசுக்கு வெற்றி, நடைபெற்று முடிந்த போரில் வீரர்கள் செய்த தியாகத்தினால் கிடைத்த வெற்றி

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13   ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 23—4—72 | இதழ் 41

முதல் கடமை-அதுதான்!

கிழக்குவங்காளம், சுதந்திர நாடாகமாறி, அதனைப் பெரும்பான்மையான வல்லரசுகளும், உலக நாடுகளும் ஒற்றுக்கொண்டுவிட்ட பின்னர், எஞ்சிய பாகிஸ்தானில் அதிபர் பதவிக்குவந்த புட்டோவினால், அந்த பகுதிக்குள் இன்னமும் ஒரு தொடர்ந்து அமைதிநிலையைத் தோற்றுவிக்க முடியாத பொது நிலையும், அரசியல் நிலையும் இருந்து கொண்டிருக்கிறது.

எப்படியும் தனது பதவிக்கும், அந்தப்பதவி சர்வாதிகாரத்துவமுடையதாக இருப்பதற்கும் அவர் மேற்கொள்கிற ஒவ்வொரு நடவடிக்கைகளும், சரியாகவோ தவறாகவோ. அவருக்கு எதிரானதாகவே மாறிக் கொண்டிருக்கிறது,

நிலைமைகளை வைத்துக் கணித்தால், பாகிஸ்தானில் இப்போதைக்கு ஒரு நிரந்தரமான அமைதிநிலை தோன்றக் கூடும் என்று நம்பமுடியவில்லை.

இந்த நிலையிலேயே, இந்திய அரசும், வங்கதேச உதயம் தொடர்பான பின் விளைவுகள் குறித்தும், அது தொடர்பான பாகிஸ்தான் விவகாரங்கள் குறித்தும் பாகிஸ்தான் அரசுடன்பேசி, பலபிரச்னைகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்த நிலை இருக்கிறது. சில பிரச்னைகளில் இந்தியா பாகிஸ்தான் இரண்டுமல்லாது வங்கதேசமும் இணைந்தே முடிவுக்கு வரவேண்டியிருந்தாலும், வங்கம் கலந்து கொள்ள வேண்டியில்லாத பலபிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளும் விழைவு காரணமாகவே, இந்தியா தானாக முன் வந்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கிறது.

முதலில் இந்தப் பேச்சுவார்த்தைகள் அதிகாரிகள் அல்லது தூதர்கள் மட்டடட்தில்தான் இருக்கும் என்று இப்போதைக்குத் தெரிந்தாலும், அந்தப் பேச்சு வார்த்தைகளின் இறுதிவடிவம் இருநாட்டுப் பிரதமர்களும் கூடிப்பேசுவதாகத்தானிருக்க முடியும்.

பாகிஸ்தானின் இப்போதைய நிலையில், அந்நாட்டின் அதிகாரிகளுடனோ, அதிபருடனோ நடைபெறும் எந்தப் பேச்சுவார்த்தைகளும் சரி, எடுக்கின்ற முடிவுகளும் சரி, அவையே இறுதியானவை உறுதியானவை என்று நம்புவதற்கு வழியில்லை.

அண்மையில் பாகிஸ்தானின் அசம்பிளிமெம்பர்கள் கூடி, ஒரு இடைக்கால அரசியல் சட்டத்தை ஏற்பதில் ஒருமித்தகருத்து கொள்ளமுடியாமல், குழப்பத்திலே கலைந்திருக்கிறார்கள்.

இராணுவ ஆட்சிக்கு ஆகஸ்டுமாதம்வரையில், அந்த அசம்பிளி அனுமதி அளிக்கும் என்று அதற்கு முன்பு கூறிவந்த புட்டோ, அசம்பிளி கூடும் சமயத்தில், தனது இடைக்கால அரசியல் ஏற்பாட்டை அசம்பிளி ஏற்றுக்கொண்டால், இந்தக் கிழமை 21-ஆம் நாளே இராணுவ ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திடீர் அறிவிப்பில் ஏதேனும் உள் நோக்கம் இருக்கக் கூடுமோ என்பதை எளிதில் சொல்ல முடியாது. ஆனால், அந்த இடைக்கால ஏற்பாட்டை, அசம்பிளியின் எதிர்க் கட்சிகள் தீவிரமாக எதிர்த்திருப்பதிலிருந்து பலவகையான சந்தேகங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாதவையாகும்.

என்றாலும், அதிபர் புட்டோவின் அரசியல் நெருக்கடிகளை அவர்கள் உணர்ந்திருப்பதாகவும், விரைவாக அந்த நெருக்கடிகள் தீர்க்கப்படவேண்டும் என்பதில் விழைவு கொண்டிருப்பதாகவும் அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

விரைவில் எல்லா எதிர்க் கட்சிகளின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையும், ஒத்துழைப்பையும் அதிபர் புட்டோ பெறக்கூடும் என்பதற்கான நல்லதொரு முன்னறிவிப்பாகவே இது காணப்படுகிறது.

என்றாலும் கூடிக் கலைந்த அசம்பிளியினால் உருவான பலன் எதனையும் உருவாக்க முடியாமற் போனது வருந்தத் தக்கதுதான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்திய அரசு எடுக்கும் எந்த முன்னோடி நடவடிக்கைகளும் உருவான பலனைத் தராது என்றாலும், இந்தியா தனது கடமையினைச் செய்துகொண்டிருக்கிறது; செய்துகொண்டே இருக்கும் என்கிற அளவுக்கு வரவேற்கத்தான் வேண்டும்.

எனினும், பாகிஸ்தானின் ஒரு நிரந்தர அமைதி நிலை உருவாவதில், உலகநாடுகளுக்கு மட்டும் அமைதி பிரசாரம் செய்து கொண்டிரும் வல்லரசுகள் வழிகோல வேண்டியது முதல் கடமையாகும்.

இப்போதைக்கு இருக்கட்டும்!

சென்ற திங்களில் சீனாவுக்கு வருகை தந்திருந்த அமெரிக்க அதிபர்நிக்சன், எவை எவை பற்றியெல்லாமோ பேச்சுக்களை நடத்திவிட்டு. இறுதியில் வெளியிட ஒப்புக்கொண்டதாகக் .கூறிக்கொள்ளும் அறிக்கையில், வருங்காலத்தில் உலகத்தின் அமைதிக்கு வித்தூன்றிவிட்டு வந்திருப்பதாக, நிக்சன் தெரிவித்திருந்தது இத்தனைச் சீக்கிரம் உண்மையாகி விடக்கூடும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

அமைதிக்கு ஊன்றப்பட்ட வித்து சீனாவில்தான் என்றாலும், அது வடவியட்னாமில் போய்விளையும் என்று எவர்தான் எதிர்பார்க்க முடியும்?

பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்துபோய் பேச்சுக்கள் நடத்தி, சர்வதேச விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதில் எந்த நாடும் பலப் பிரயோகம் செய்யக்கூடாது என்று எடுத்துக் காட்டிய வித்தகர் நிக்சனேயாவர்.

அந்த நிக்சனுடைய ஆணைகள்தான், மூன்றுவது உலகப் போர் மூண்டுவிடக்கூடும் என்ற நிலையையும் எண்ணத்தையும் உலக நாடுகளிடையே தோற்றுவித்திருக்கிற நிலைமைக்கு வடவியட்னுமை குண்டுகளால் அழித்து ஒழிக்கச் செய்திருக்கிறது.

அதிபர் நிச்சனுடைய அண்மைக் கால நடவடிக்கைகளும், போக்குகளும் அறிவு பூர்வமாக சிந்தித்துச் செயல்படும் எந்த நாட்டாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இல்லை.

ஏதோ ஒருவகையான வெறி உணர்ச்சியில் அவர் செயல்படத் தொடங்கிவிட்டார் என்றுதான் நினைக்கவேண்டி யிருக்கிறது.

அடுக்கடுக்கான ஏமாற்றங்களில், சாதாரண மனிதன் தன்நிலை இழந்து தவருன வழிகளை நாடக் கூடும். அப்படி ஒரு நாட்டின் அதிபர் நடக்கத் தொடங்கிவிட்டால் அது அந்த நாட்டுக்கு மட்டுமல்ல—ஞாலத்துக்கே கேடுண்டாக்கக்கூடும் என்பதை நிக்சன் உணரவேண்டும்; உணரக்கூடிய நிலையில் அவர் உள்ளம் அமைதியாக சலனமற்று இருப்பதாகத் தெரியவில்லை. எனவேதான் விளைவுகளை இப்போது வடவியட்னும் சந்திக்க நேர்ந்திருக்கிறது.

இது தடுக்கப்படாமலே போய்விட்டால்? இப்போதைக்கு இது வினுக் குறியாகவே இருக்கட்டும்.

—திருவாரூர் முத்துராமன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தானேயன்றி இத்திராவின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியல்ல!

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசினைக் கவிழ்த்துவிடலாம்—அழித்துவிடலாம் என்றெல்லாம் பேசிக்கொண்டு வருகிருர்கள்.

வரலாறு என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல; மனித வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்புதான் வரலாறு; நேற்று நடந்தது இன்று வரலாறு ஆகலாம்; நாளை வருவது ஒரு கேள்விக் குறிதான் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இதை நினைவு படுத்தும்போது கலைஞர் அவர்கள் 'நாம்' படத்தில் எழுதிய வசனம் ஒன்று பசுமையாக எனது நினைவில் நிற்கிறது; 'ஆச்சர்யக்குறி கொஞ்சம் வளைந்துவிட்டால் கேள்விக்குறியாகிவிடும்' என்பதுதான் அந்த வசனம்.

அனைவருக்கும் சரிசமமான உரிமையுள்ள சம தர்மம் உருவாக வேண்டும் என்பதுதான் தி.மு. கழக அரசின் கொள்கையாகும்!

உள்ளன்புடனும் — பாசத்துடனும் — பண்புணர்ச்சி யுடனும் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது தி.மு. கழக ஆட்சி! இதன்மீது கொண்ட அச்சம் காரணமாகத் தான், மாற்றுர்கள் ஏசிப் பேசத் துவங்கியுள்ளனர்!

'தி.மு.க. ஆட்சியிலே ஊழல்—ஊழல்' என்று பேசுகிருர்கள்; பக்த வத்சலனுரேகூட ஊழலைப் பற்றிப் பேசுகிருர்.

இப்படியெல்லாம் சொல்வதன் மூலம், தங்கள் கட்சியைப் பலப் படுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைக்கிருர்கள்! அது ஒரு காலும் நிறைவேறப்போவதில்லை!

தி.மு.க. ஆட்சியில் குறை ஏற்படுகிறது என்ருல், 'இன்னகுறை நடக்கிறது' என்று சொல்லட்டும்; யார் மீது குற்றம்—என்று தெளிவாகச் சொல்லட்டும்; அதற்காக வழக்கு மன்றத்திற்கு வேண்டுமானுலும் செல்லட்டும்; இப்படியெல்லாம் செய்யாமல், சில பத்திரிகைகளைத் தூண்டிவிட்டுப் பொய்ப் பிரசாரங்கள் செய்யச் சொல்வானேன்?

கழகத்திற்குள் பிளவுஉற்படுத்துவதற்கு இப்படி யெல்லாம் வழி கோலலாம்—என்று சில குழப்பவாதிகள் நினைக்கிருர்கள், இங்கு குழப்பங்களை ஏற்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

'இந்த ஆட்சி, தானே கவிழ்ந்துவிடும்' என்று சிலர் சொல்கிருர்கள்; என்ன நல்லெண்ணம் பாருங்கள்—அவர்களுக்கு!

"எந்தக் கட்சியும் அழியக் கூடாது—கட்டுப்பாட்டோடு கண்ணியமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் நாம்; ஆகவே, 'கழகம் வளரக் கூடாது' என்று சொல்பவர்களைப் பார்த்து வாய் விட்டுச் சிரிக்கத்தான் வேண்டி யிருக்கிறது!

நம்மைத் தாக்க வரும் எதிரியைக் கூட மதிக்கும் நல்லெண்ணத்தை நமக்கு அண்ணு அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்; ஆனுல் பக்க வாட்டில் நின்றுகொண்டு தாக்க வருவோரை — அவர்களது வஞ்சகத்தை—அந்தப் பஞ்சமா பாதகர்களை நாம் கண்காணிக்கத் தவறமாட்டோம்!

கழகத் தலைவர் கலைஞரைப் பார்த்து, 'திட்டம் தாருங்கள்—கட்டளையிடுங்கள்' என்றெல்லாம் இங்கு பேசிய அன்பில் தர்மலிங்கம் கேட்டார்; மக்களுக்கு வாழ்வுதரத் தான் கலைஞர் அவர்கள், மாநில சுயாட்சி கேட்கிருர்—இந்திரா அம்மையாரும் நிச்சயம் தருவார் என்று நம்பலாம்.

ஏனென்ருல் பண்டித நேரு காலத்தில், 'மகாராட்டிரம் பிரியும்' என்று யாரும் நினைக்கவில்லை; மகாராட்டிரமும் பிரிந்தது—குசராத்தும் பிரிந்தது; அதற்கு வழி கோலியவர் பண்டித நேரு அவர்கள்; அவருடைய திருப்புதல்வியான இந்திரா அம்மையார், நாம் கோரும் இந்தநியாயமான கோரிக்கையைப் புரிந்துகொண்டு—அமைதியாகவே நமக்கு மாநில சுயாட்சி வரும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்."

★

காஞ்சீபுரம்

தம்பி !

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (5)

எல்லோரும் இந்நாட்டு மன்னர்—என்பது பற்றிய விளக்கம் தரத் தொடங்கிப், பேரறிவாளர் பெர்னுட்ஷா காட்டிய மன்னனைக் குறித்துக் கருத்தினைச் செலுத்திக் கொண்டிருந்தோம் அல்லவா—இடையிலே சென்ற கிழமை—சென்னை மாநகராட்சிமன்றத் தலைவர் தேர்தல் பற்றி எழுந்த நிலைமைகள், என்னை அவ்வழி இழுத்துச் சென்றதால், நாம் மன்னனை மறந்தோம். இதோ, மீண்டும் முடிதரித்தோன்.

நினைவிலிருக்கிறதல்லவா, குடிஅரசுக்கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட மன்னன்—முடிஅரசு முறையின் மூலத்தைக் கல்லி எறியத் தேவையில்லை. அதனை ஓர் சின்னமாக, அணியாக வைத்துக்கொண்டு, மக்களாட்சியை நடாத்திச்செல்ல இயலும் என்ற நம்பிக்கையுடன் நாடாளும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட, அமைச்சர்கள். அவர்களில் ஒருவனை, மன்னன் தித்திப்புப் பேச்சு மூலமே, தீர்த்துக் கட்டிவிட முனைந்த கட்டம்! எதிர்த்துப் பேசச் சென்று, இளித்துவிட்டுத் திரும்பிய அவன் போக்கு—இதனைக் கண்டோம்.

மன்னன் முடிதரித்த-சிரம்கொண்டோன் மட்டுமல்ல; மனதிலே, திடம், பேச்சிலே திறம், நடவடிக்கையிலே உறுதி, இவையெலாம் கொண்டவன், எனின் அவன் ஏன், மன்னனாக இரேன் என்று கூறினான் என்றன்றோ கேட்கிறாய்! அது, அவன் கையாண்ட முறை! மன்னனைப் பொம்மையாக்கி வைத்துக்கொண்ட பிறகும், மனக்கொதிப்புத் தீராமல், அடியோடு ஒழித்துக் கட்டிவிட்டு பீடத்தை வெற்றிடமாக்கிவிட்டால் மட்டுமே, எல்லோரும் இந்நாட்டு மன்னராகத் திகழ முடியும் என்று எண்ணிக் கனல் கக்கும் கண்ணினராய், தீச்சொல் உமிழும் வாயினராய், கொலுவிருக்கும் அமைச்சர் களுக்குத் தக்க பாடம் புகட்டவேண்டும் என்று எண்ணினான், மன்னன், அதற்காகவே, மன்னன், நான் அரச பீடத்தில் அமர்ந்திருக்க விரும்பவில்லை—விலகிக்கொள்கிறேன்—என்றுரைத்தான்.

1960-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியலில், பரபரப்பும் விறுவிறுப்பும் ஏற்பட்டது. அவ்வாறு ஏற்படக் காரணமாக இருந்தவை, அமரர் அண்ணாவின் கட்டுரைத் தொடர்கள்.

அத் தொடரின் ஐந்தாவது கட்டுரை இது. 4-12-'60 அன்று 'திராவிட நாடு' இதழில் வந்தது.

இவன் மதிமிகு மன்னன்! இவனுக்கெனத் துறையில்லை, அலுவல் இல்லை, அதிகாரம் இல்லை! முத்திரை மோதிரம் இருக்கிறது, நமது விருப்பத்தைச் சட்டமாக்கி அதிலே தன் பெயரை, ஆணையினைப் பொறித்திட! இவ்வளவே அவன் பணி! எனினும் இவன், இதுபோதும் என்று எண்ணுபவனாக இல்லை. கலைமான்களையும், கலாபங்களையும் கிள்ளை மொழியையும் கிண்கிணி ஒலியையும்

வண்ணத் தாமரையினையும் வட்டில் மோகினிகளையும், கண்டும் கொண்டும், காலமெலாம் களிநடம் புரியட்டும்ஆ பணம் பாழாகும்—ஓரளவு—எனினும், மக்களை ஆட்டிப்படைத்திடும் வாய்ப்பினை அதிகாரமூலம், பெற விழைவு கொள்ளாதிருந்தால் போதும், என்று எண்ணினர்-அங்ஙனம் எண்ணியே, அரண்மனையில் அரசோச்ச அனுமதித்தனர். இம் மன்னனோ, அரண்மனையோடு தன் அரசோச்சுதல் இருந்துவிடுவதில் மன நிறைவு கொண்டானில்லை. அரசாளவேண்டும், அரசன் என்ற நிலை உண்மை என்றால், இல்லையேல், அரசாள, அரசன் என்ற நிலையையே வேண்டாமென்று விட்டொழிந்துவிடுதல் வேண்டும்—என்று எண்ணினான். அவனைத்தான் பெர்னாட்ஷா, படம் பிடித்துக் காட்டுகிறார், தமது நாடகப் பெருநூலில். புயலார் என்று கூறத்தக்க போக்குடைய, புதிய அமைச்சரை, மன்னன், புன்னகை பூத்த முகத்தினனாக மட்டுமல்ல, அசட்டுச் சிரிப்புக்காரனாகவே, நொடியில் மாற்றி அனுப்பிய காட்சியினைக் கண்டாய், இனி, அமைச்சர் அவை காணலாம்.

முதலமைச்சர், ப்ரோடியஸ் எனும் பெயருடையார், காட்சி மூலம், அவர் போக்கு விளங்கிடும்—அதற்கேற்பப், பொருத்தமான, வசதியான பெயரைத் தேடிச் சூட்டிவிடு, தம்பி! அவருடைய தலைமையிலே அவை கூடுகிறது.

முடிதரித்த மன்னன் பிடியிலே சிக்கிக் கிடந்தது நாடு! அவன்இட்டது சட்டம்! என்ற நிலை இருந்தது. மக்கள், வாயில்லாப் -பூச்சிகளாக்கப்பட்டுக் கிடந்தனர். நம் போன்றாரின் உள்ளத்திலே ஓராயிரம் உன்னதமான எண்ணம் எழும்—பயனென்ன?—யாவும் மக்கி மண்ணாகிப் போகும்—அவைதமை மதித்திடான் மன்னன்! கலை அறியான்—எனினும் அவனே கலைக்கூடக் காவலன்! பொருள் ஈட்டும் வழி அறியான்—எனினும் பிறர் திரட்டியதைக் கொண்டு வந்து கொட்டச் சொல்வான், பெருநிதிக்கு உடையோன் ஆவான்! வாளேந்தான்—எனினும் அவனே படைகளுக்கெலாம் தலைவன்எனும் விருதுடையோன் என்பர்! இந்நிலையில் இருந்த முடி அரசு முறையினை எதிர்த்துப் போரிட்டுப் போரிட்டுக், குடிஅரசுக்கோட்பாட்டினை மெள்ள மெள்ள வெற்றிபெறச் செய்து, கொற்றவன் கொலுவிருக்கட்டும், ஆனால் அரசு நடாத்த, ஆற்றலுள்ளோர் அமைச்சர்களாகட்டும்—அந்த ஆற்றலை அளந்திடும் கோலாக, மக்கள் அளித்திடும் ஆதரவு அமையட்டும்—அந்த ஆதரவு பெறும் முறையாக, தேர்தல் முறை ஏற்படட்டும் என்றெல்லாம், திட்டம் தீட்டி நடைமுறையாக்கி, மன்னனை இன்று, அரண்மனைவாழ் அறங்காரன் என்ற அளவுக்குக் கொண்டுவந்து நிறுத்திவிட்டோம்; உண்மையில் அரசாள்வது நாம்—என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து கிடப்போர், அமைச்சர்கள். முதலமைச்சரோ, அத்தகைய மகிழ்ச்சியால் மயக்கமுற்று உண்மை நிலைமையை அடியோடு மறந்துவிட்டவரல்ல—மன்னன், எப்படிப் பட்டவன் என்பதை உணர்ந்திருக்கிறார்.

> சென்ற தேர்தலிலே நாம் மற்ற எல்லாக் கட்சிகளையும்அழித்தொழித்து, இந்த மூன்றாண்டுகளாகஅதிகாரத்தில் அமர்ந்திருக்கிறோம். ஆனால் இந்த மூன்று ஆண்டுகளும், உள்ளபடி, நாட்டை ஆள்வது, இந்த மன்னன்தான் என்பதை உணர்கிறீர்களா...?

—என்று கேட்கிறார், முதலமைச்சர்!

முடி அரசு, நிலைகுலையாமல் இருந்த நாட்களில், அரசன், சிலரை அமைச்சர் ஆக்குவான்—ஆற்றல் அறிந்தேதான் என்பதல்ல—எவ்வகையாலோ, மன்னன் மனதில் இடம் பெற்றவனானால் போதும்! மன்னன் மகிழ மலர் கொடுத்திருக்கலாம்—காட்டு மல்லிகையோ, வீட்டுரோஜாவோ, ஏதோ ஒரு மென் மலர்!!

அமைச்சர்கள் இருப்பர்—அரசாள அல்ல—அரசன் ஆட்சி நடத்துவான், இவர்கள் எடுபிடிகளாவர், இளித்துக் கிடப்பர்,

முடி அரசு முறையின் கேடு முறிக்கப்பட்டான பிறகு, மன்னன்இருப்பான்-ஆனால், அரசாள்வோனாக அல்ல—முடி தரித்துக் கொலுவிருக்க! அமைச்சர்கள் இருப்பர்—முடி இராது சிரத்தில்—ஆட்சியின் பிடியோ, அவர்தம் கரம் இருக்கும்.

ஷா, குடிஅரசுக் காலத்துக் கொற்றவனைத்தான் காட்டுகிறார். எனினும், அவன் எங்ஙனமோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் தலைவன், அச்சத்துடன் ஆயாசத்துடன் உணரத்தக்க விதத்தில், வெறும் சின்னமாக இருந்துவிடாமல், ஆட்சியை நடத்துபவனாக இருந்து வருகிறான். இதனைத்தான் முதலமைச்சர், மற்ற அமைச்சர்களுக்குக் கூறுகிறார். கூறுகிறார் என்று சொல்வதற்கில்லை—இந்த நிலையை உணர்ந்திருக்கிறீர்களா, என்று கேட்கிறார்!

> ஒரு அமைச்சர், இந்த அளவு உணர்வு பெறாததால், எனக்கு அப்படிப் புலப்படவில்லை...

என்று கூறிடத் தொடங்கும்போதே, முதலமைச்சருக்கு இருப்புக்கொள்ளவில்லை,

> இதை உணர்ந்துகொள்ள உம்மால் முடியாவிட்டால், விலகிவிடுமய்யா! நிலைமையை உணர்ந்து கொள்ளக்கூடியவர்களுக்கு இடம்கொடும்! இல்லையானால், என்வேலையை ஏற்றுக்கொண்டு, கட்சியை நடத்திச் செல்லும்

என்று பேசுகிறார்.

அமைச்சராயிற்றே! வேறு பல அமைச்சர்கள் முன்னிலையில், முதலமைச்சர் பேசிவிட்டார் என்பதால், கோபம் எழுமல்லவா, எனவே, அந்த அமைச்சர், சற்று முடுக்காக — ஆனால் ஆழ்ந்த அறிவின் துணையுடன் அல்ல—பேசுகிறார்.

> முதலமைச்சர் ஐயா நீர்! முழுமுதற் கடவுள் அல்ல! மன்னன் என்ன செய்யஇயலும் என்கிறீர்? நாம் எதை எப்படிச் செய் என்று புத்திமதி கூறுகிறோமோ, அதைத்தான் செய்ய முடியும். அதிகாரம் அனைத்தும் நம்மிடம் இருக்கும்போது, அந்த மன்னன் எப்படிநாடாள இயலும்? சொல்கிறீரே!!

* * *

தம்பி! இந்த அமைச்சர் கேட்பது போலத்தான், பெரும்பாலானவர்களுக்குக் கேட்கத் தோன்றும், ஏனெனில், ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின்படி, அமைச்சர்களிடமே எல்லா அதிகாரங்களும்-மன்னன் தானாக ஏதும் செய்ய இயலாது, எனினும் இந்த மன்னன், ஒரு முதலமைச்சர் அச்சம் கொள்ளத்தக்க முறையில் அமுல் நடத்துகிறான்! எப்படி?

மன்னனும் அமைச்சர்களும் பேசிடும் கட்டத்தின்போது, இது விளக்கப்பட்டிருக்கிறது—நாடக நூலில், தம்பி! நான் குறிப்புகள் மட்டுமே தருகிறேன்.

குடிஅரசுக்கோட்பாடும், கேடு களையப்பட்ட முடி அரசு முறையும் இணைந்ததோர் அமைப்பினைக் குடிக் கோனாட்சி முறை என்று கூறுவர்.

குடிக்கோனாட்சி முறையிலே, அமைச்சர்களே அனைத்துக்கும் பொறுப்பாளர்; மக்களே, ஆட்சி மன்றத்தினரைத் தேர்ந்தெடுப்பர்.

அமைச்சர்கள் ஆட்சிமன்ற மூலம் சட்டங்கள் இயற்றுவர் — திட்டங்கள் திட்டுவர்—நாடு அவை தலைமை ஏற்கும்.

இந்த முழு உரிமை அமைச்சர்களுக்கு—எனினும், ஏதேனும் ஓர் சட்டமோ திட்டமோ, செயலோ, முறையோ மக்களுக்கு ஊறு விளைவிக்கும் என்று ஏற்படின், மன்னன், அதனைத் தன் மறுப்பு மூலம் தடுத்து நிறுத்தலாம்.

நாட்டை நடத்திச் செல்ல அமைச்சர்கள்— அவர்கள் நடத்திச் செல்வதிலே, மன்னன் குறுக்கிடவோ, அலுவலிலே பங்கு பெறவோ கூடாது— ஆயினும், நடத்திச் செல்லப்படுவதை, மக்கள் சார்பில், நாட்டின் சார்பிலே, கூர்ந்து கவனித்தவண்ணம் இருந்து, பேராபத்துக்கு நாட்டை இழுத்துச் செல்லும் நிலை ஏற்பட்டுவிடும் என்று தோன்றினால், தடுத்து நிறுத்திடமன்னனுக்கு அதிகாரம் உண்டு.

மன்னர்கள் இந்தத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை—அநேகமாக.

தேவைப்படுவதில்லை, ஆகவேதான் பயன்படுத்துவதில்லை என்று கூறுவார் உளர்.

தெரிவதில்லை, ஆகவே பயன்படுத்துவதில்லை என்றுரைப்பாரும் உளர்.

பயன்படுத்தத் தொடங்கினால், பிறகு இந்த அதிகாரமும் பறிக்கப்பட்டுப் போய்விடும் என்று அச்சம்—எனவே எந்த மன்னனும், தன்னுடையது என்று குறிக்கப்பட்ட, தடுத்து நிறுத்தும் உரிமையைப் பயன்படுத்துவதில்லை, என்றும் கூறுவர் வேறு சிலர்.

தம்பி! இந்த மன்னன் இந்த 'அதிகாரத்தை'ப் பயன்படுத்தி, அமைச்சர்களின் உரிமையைப் பாழாக்கினானில்லை.

இவன் செய்ததெல்லாம், சான்றோர் கூடிடும் இடங்களில், அல்லது மக்கள் மன்றங்களில் பேசும் வாய்ப்புப் பெறும்போது, மன்னனுக்கு உள்ள இந்த அதிகாரத்தைப்பற்றி விளக்கம் தந்து வருவது வாடிக்கை.

மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நோக்குடன் குடிஅரசு முறை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையின்படி, நாடாளும் பொறுப்பினை ஏற்றுள்ளோர் அமைச்சர்கள். அவர்கள் வழி தவறி நடப்பின், அல்லது முறை கேடான செயலில் ஈடுபடின், தீது தரும் சட்ட திட்டத்தைப் புகுத்திடின், தடுத்து நிறுத்த, மன்னருக்கு அதிகாரம் உண்டு. எனவே அமைச்சர்களின் ஆட்சியிலே எப்படி கெடுதல் ஏற்பட்டுவிடுமோ என்று மக்கள் கலக்கமடையத் தேவையில்லை—மன்னன் இருக்கிறார், தடுத்து நிறுத்திடும் வல்லவராக!

இம்முறையில் பேசிக்கொண்டிருந்தார் இந்த மன்னர்.

இந்தக் கருத்துப்பட இதழ்கள் எழுதியவண்ணம் இருந்தன—அந்த இதழ்களில் மன்னனுக்குத் தொடர்பு உண்டு!!

அமைச்சர் அவையின் மதிப்பு, இதன் காரணமாகக் குறையும் அல்லவா?

இவர்களைக் கண்காணிக்க ஒரு மேலோன் இருக்கிறான்.

இவர்கள் ஏதேனும், தெரிந்தோ தெரியாமலோ, தவறுகள் செய்துவிடக் கூடும் என்பதால், அந்த மேலோனிடம், இறுதி அதிகாரத்தை—தடுத்திடும் உரிமையை—ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆகவே, அந்த மேலோன்தான், உண்மையில், மக்களின் பாதுகாவலன்!!

தம்பி, இந்தக் கருத்துக்களைத்தான், காவலன், பேச்சு கிளப்பியபடி இருந்தது.

அமைச்சர்கள், தவறு செய்யக்கூடியவர்கள்— தவறு செய்கிறோம் என்று தெரியாமலேகூட தவறுகளைச் செய்துவிடக்கூடியவர்கள்—எனவேதான், ஒரு மேலோன், இருக்கிறான், தடுத்து நிறுத்த! அந்த மேலோன், எது நாட்டுக்கு, மக்களுக்கு, தீது பயக்கும் நன்மை பயக்கும், என்பதை அறிந்திடும் ஆற்றல் படைத்தவன்—தடுத்து நிறுத்திடும் தகுதி படைத்தவன்!—



செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. 5-ஆவது மாநாடு கடந்த ஏப்ரல் திங்கள் 7, 8-ஆம் நாளன்று காஞ்சியில் நடைபெற்றபோது கழகப் பொருளாளர், புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் உரையாற்றுகிறார்.

குடிஅரசு முறையையும் நடத்திக்கொண்டு, இந்தக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொண்டு இருப்பது, முரண்பாடாக மட்டுமல்ல, சிறிதளவு தரக்குறைவாகவேகூடத் தோன்றும்.

மமதை, மந்தமதி, அக்கரையற்ற போக்கு, இவைகள் காரணமாக, தன்னிச்சையாக நடக்கும் மன்னன், நாடு கேடுறக்கூடிய காரியமாற்றுவான்—எனவே கட்டுப்படுத்த வேண்டும், மட்டுப்படுத்த வேண்டும்—என்று ஆர்த்தெழுந்து பலர் பேசிப் பேசிக் கிளர்ச்சி பல நடாத்திக், கொடுமைகளை ஏற்றுக்கொண்டு, இறுதியில் பெற்றது, எல்லோரும் இந் நாட்டு மன்னர்—எனும் குடிஅரசுக் கோட்பாடு!

எனினும் அமைச்சர்களையும், கண்காணித்துவர, தவறாகச் சென்றால், தடுத்து நிறுத்திவிட ஒரு மேலோன் உண்டு!—அந்த மேலோனாக ஒரு மன்னன் இருந்து வருவான், என்பது, முடி அரசுக் காலத்திலே தரப்பட்டிருப்பதைவிட, வலிவான அதிகாரம் என்று, முதலமைச்சர் கருதினார்.

எனவே, மன்னன், இனி அந்த 'உரிமை'யைப் பற்றி, எங்கும் பேசக்கூடாது, என்று உறுதிமொழி தந்தாகவேண்டும்—என்பது முதலமைச்சரின் திட்டம். அந்தத் திட்டத்துக்கு மன்னன் ஒப்பம் அளித்தாக வேண்டும் என்று வலியுறுத்தவே, அமைச்சர் அவை கூடிற்று. அரண்மனையில் ஓர் பகுதியில்.

அமைச்சர் அவையில் என்னென்ன போக்கினர், நோக்கினர், உளர், என்பதைப் பெர்னார்ட்ஷா, எடுத்துக் காட்டுவதைப் படிக்கும்போது, நகைச்சுவைக்காக இருக்குமோ, என்று எண்ணத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மையான நிலைமை, எந்த அமைச்சர் அவையிலும் என்பது, தம்பி! எண்ணிப் பார்த்திடும் எவருக்கும் புரியும்.

ஐவர் கொண்ட அமைச்சர் அவை! இதில் இடம் பெற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயல்பினர்! அம்மட்டோ! ஒருவரைக் குறித்து ஒருவர், கொண்டுள்ள கருத்துக்களோ, வேடிக்கை வேடிக்கையானவை! தமக்கன்றி மற்றவர்களுக்கு, தகுதியும் திறமையும் இல்லை, அமைச்சராக இருக்க—என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள எண்ணம்.

உற்றார் உறவினருக்கு, வரம்பு மீறிப் பதவிகள் கொடுப்பவர்என்று ஒருவரைப்பற்றி மற்றவர், புகார் கூறிக் கொள்வர்.

நம்மால் மட்டுமே இந்த அமைச்சர் அவை செயல்படுகிறது, அமைச்சர் அவை ஏற்படத்தக்க விதமான வளர்ச்சி கட்சிக்கு ஏற்பட்டது, என்று ஒவ்வொரு அமைச்சருக்கும், உள்ளூர எண்ணம்.

முதல் அமைச்சருக்கு அமைச்சர்கள் அனைவருமே, இடம்பிடித்துக் கொண்டவர்கள், என்ற எண்ணம்!

இதனை விளக்கிடும் பான்மையிலே, அமைச்சர்களின் பேச்சினை, அழகுற அமைத்தளிக்கிறார். ஷா. கருத்து வேற்றுமைகளை எடுத்துக் கூறிக்கொள்வதிலே, கட்டுக்கு அடங்கும் தன்மையும் கைவிடப்பட்டு விடுவது கண்டு, முதலமைச்சர், மன்னனை எண்ணிக்கொள்கிறார்.

தம்பி! நாடகத்திற்கு ஷா சூட்டியுள்ள பெயர் ஆப்பிள் கார்ட் (Apple Cart) என்பது; தமிழில் இதற்கொப்பான பெயரிடவேண்டுமெனின், நெல்லிக்காய் மூட்டை எனலாம்.

மூட்டைக்குள் இருப்பதால், உருண்டோடிவிடவில்லை; அவிழ்த்துவிட்டால், திக்காலொன்றாக உருண்டோடிவிடும்!

தீர்த்துக்கட்டி விடவேண்டும் முடி அரசு முறையை! சின்னமும் கூடாது! முழுக்க முழுக்கக் குடிஅரசு மலரவேண்டும்!—என்று முழக்கமிட்டு அமைச்சரான புயலார்—ஒருவர்! இன்னொருவர், பெரிய முதல்போட்டு நடத்தப்படும் தொழிற்சாலை முதலாளியின் கையாள்! இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சீர்கேடு!

இந்தச் சீர்கேடுகளை அறிந்து, தக்கபடி பயன்படுத்திக்கொண்டு, தன் தலைமையைக் காப்பாற்றிக் கொண்டுள்ள முதலமைச்சர்.

மன்னன் இதனை நன்கு அறிவானே—இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்வானே, என்ற கவலை முதலமைச்சருக்கு.

மன்னர்களுக்கு மதி ஏது! என்று எண்ணுபவர்—அதிகாரம் ஏது! என்று நினைப்பவர்—ஏது செய்ய இயலும்!! என்று பேசுபவர்—எதற்காக இப்படி ஒரு பதுமை! என்று ஏளனம் பேசுபவர்—இப்படித்தான் அமைச்சர்கள் உளர்!

முதலமைச்சரோ, இந்த மன்னன், மதிமிக்கவன், வாய்ப்பினை நழுவவிடாது காரியம்செய்பவன், என்று உணர்ந்திருக்கிறார்.

மனதிலே திடமும் தெளிவும் கொண்டவன் மன்னன். தெளிவற்ற பத்துப் பேர்களைக்கூடத், தெளிவும் திடமும்கொண்ட ஒருவன் வீழ்த்திவிட முடியும். மன்னன் அப்படிப்பட்டவன். நீங்கள் ஒருவருக்கொருவர் மாறுபாடுகளைக் குறித்துக் கூச்சலெழுப்பிப், பிளவுபட்டு நிற்பீரேல், மன்னன்பாடுதான் கொண்டாட்டம் என்பதனை முதலமைச்சர் எடுத்துக் காட்டுகிறார்.

தபால்துறை, எதனையும் இயக்குவிக்கும் வலிவுத் துறை, எனும் இரண்டினையும், மாதர்களிடம், ஒப்படைத்திருக்கிறார், பெர்னாட்ஷா, நாடகத்தில்!!

இந்த இருவரும், அமைச்சர் அவை கூடிடும்போது, உடனிருந்திருக்க வேண்டும்—எனினும், ஷா தீட்டிய நாடகத்தில், இந்த இரு பெருமாட்டிகளும் அமைச்சர் அவைக்கு, மன்னர் வரும்போதுதான், அவருடன் வருவதாகக் காட்டியிருக்கிறார்!

அமைச்சர்அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூடத்துக்கு, மன்னன், இந்த இரு மாதர்களும் இருபுறம் இருக்கும் நிலையிலேதான், வந்து நுழைகிறார்.

மன்னன், பேச்சாற்றல் மிக்கவன் என்பதை, தம்பி! முன்பே—கண்டிக்கிறாய்—ஆனால் அவனுடைய முழு ஆற்றலை, இங்குதான், காணவேண்டும்.

> என்னை வந்து காணும் உரிமையை, அமைச்சர் குழுவினரே! ஒருசேர நீவிர் இன்று பயன்படுத்தி எனக்குக் களிப்பூட்டிடும், காரணம் யாதோ! நாம் அதைக் கேட்டு இன்புறலாமோ!

என்று பேச்சைத் துவக்குகிறார் மன்னர்.

முதலமைச்சர், சுற்றி வளைத்துப் பேசாமல் அமைச்சர் அவையின் முடிவை எடுத்துக் கூறுகிறார்.

அதைத் தொடர்ந்து, சுவைமிக்க உரையாடல் நடைபெறுகின்றன.

எமது ஆட்சியிலே, மக்கள் வாழ்வில் வளம் பெற்று மகிழ்கிருர்கள் என்கின்றனர் அமைச்சர்கள்.

வாழ்வில் வளமா? யாருக்கு மக்களுக்கா! இல்லேயே! தொழில் அதிபர்கள் அல்லவா கொழுக்கிருர்கள்! என்றெல்லாம், சுட்டிக்காட்டிக் கேலிசெய்கிருர் மன்னர்.

கடைசியில், இனிக், கட்டுக்கு அடங்கி நடந்து, கொள்வதாக, இறுதி உறுதிமொழிச் சீட்டிலே மன்னன் கையொப்ப மிடவேண்டும் — அதனைப் பெருமல் அமைச்சர் அவை கலேயப்போவதில்லே, என்று முதலமைச்சர் அறிவிக்கிருர். அரசன், உறுதி மொழிகள் யாவை என உசாவுகிருன்.

*   *   *

மன்னர் இனி, சொற்பொழிவாற்றக்கூடாது!

அப்படியா! அமைச்சர் அவை தயாரித்துக் கொடுக்கும் சொற்பொழிவுகளேக் கூடவா நான் படித்துக் காட்டக்கூடாது!

ஆமாம்......ஆமாம்......அதை வைத்துக் கொண்டே, படிக்கும் முறையிலேயே, கேலியும் கண்டனமும் எழச் செய்துவிடக்கூடிய திறமை சாலி, நீர்—தெரியும்!

வாயைத் திறக்கவே கூடாதா? ஊமையாக இருக்கவேண்டும், உங்கள் மன்னர்! அப்படித் தானே!

ஒருவிதத்திலே, அப்படித்தான், அரசியல் பேச்சுக்களேப் பொறுத்த வரையிலே, மன்னர் ஊமையாகத்தான் இருக்கவேண்டும். ஏதாவது திறப்புவிழாக்களிலே, வேண்டுமானுல், இதைத் திறந்து வைக்கிறேன் என்று கூறலாம்.

சரி! மற்றும், நான் செய்யவேண்டியது?

பத்திரிகைகளில் கட்டுரைகள், செய்திகள், எழுதக்கூடாது.

நானு எழுதுகிறேன், இல்லேயே...

உங்கள் தூண்டுதலால், எழுதப்பட்டு வருவது தெரியும்.

நீங்கள் கூடத்தான் எழுதுகிறீர்கள்.

நாங்கள் எழுதுவோம்! நீர் எழுதக்கூடாது!

என்ன நியாயமோ!! சரி! ஆகட்டும்! பிறகு?

தடுத்து நிறுத்தும் உரிமை, அதிகாரம் இருந்து வருகிறதே, அதை அடியோடி விட்டுவிட வேண்டும்.

அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தவே இல்லேயே, இதுவரையில்.

அதைப்பற்றி பேசுகிறீர்......

ஆமாம்! மக்களாட்சியிலே அமைச்சர்களுக்கு உள்ள அதிகாரம், உரிமைபற்றி, நீங்கள் பேசுகிறீகள். அதுபோல், மன்னனுக்கு உள்ள அதிகாரத்தைப்பற்றி நான் பேசினுல், என்ன?

நாங்கள் பேசுவோம், நீர் பேசக்கூடாது.



இந்த உறுதிமொழியில் நான் கையொப்ப மிடுவது, மிகக் கடினம். ஏனெனில் கையொப்ப மிட்டுவிட்டால், அதன்படி நடக்கவேண்டும். என்னுல் ஏதும் செய்யாமல், பொம்மையாக இருந்து வர இயலாதே.

மீறக்கூடாது. உறுதிமொழியில் கையொப்பம் இடத்தான் வேண்டும்.

மறுத்தால்?

மறுத்தால்! அமைச்சர் அவை, 'ராஜிநாமா'ச் செய்யும். பொதுத் தேர்தல்! என் கட்சி மக்களிடம் சென்று, கட்டுக்கடங்கிய காவலன் வேண்டுமா, கண்மூடித் தர்பார் வேண்டுமா என்ற பிரச்சினேயை வைத்துப் போட்டியிடும், வெற்றி எமது கட்சிக்கே!!

*   *   *

தம்பி! மக்களே, இந்தப் பிரச்சினே மூலம், கட்சி தன் வயப்படுத்திக்கொள்ளும் என்பதை உணரமுடியாதவன் அல்ல, மன்னன்.

எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்க்கிருன், இந்த ஏற்பாடு வேண்டாம்—என் இயல்புக்கு ஏற்றதல்ல—என்றெல்லாம்.

முதலமைச்சருக்கு இந்தப் பிரச்சினேயே, மன்னன் பிடிவாதம் காட்டுவது, தன் கட்சிக்குப் பெருத்த இலாபமே பெற்றுத் தரும் என்பது நன்ருகத் தெரியும். எனவே, உறுதியுடன் பேசுகிருர்.

பொதுத் தேர்தலை, இவ்வளவு விரைவிலே வைத்துக்கொண்டால், பெருஞ்செலவு, மறுபடியும்!! இந்தக் கவலை சில அமைச்சர்களுக்கு—குறிப்பாக, புதிதாக அமைச்சரானவருக்கு.

பல கட்டங்கள், உள்ளன, இந்தக் காட்சியில்.

அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக்கொள்வது முதற்கொண்டு, 'தொடர்புகள்' பற்றிய புகார்கள் வரையிலே! ஒவ்வொன்றும் படித்திட இனித்திடும், என்பது மட்டுமல்ல—வரிக்கு வரி, குடி அரசு, தக்கபடி நடைமுறைக்குக் கொண்டுவரப்படாவிட்டால், வெறும் கேலிக்கூத்தாக்கப்பட்டுப் போய்விடும் என்பதுபோன்ற அரசியல் விளக்கங்களைப் பெறலாம். பிறிகோர் சமயம், விரிவாகக் கூறிடக்கூட எண்ணுகிறேன்—இப்போது நாம், விரைவாக, இறுதிக் கட்டம் கண்டாக வேண்டும்.

*   *   *

முடிவை மாற்றிக்கொள்ளப்போவதில்லை.

ஆம்! உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டே தீரவேண்டும்.

வேண்டாம் முதலமைச்சரே! மன்னன், என்றோர் சின்னம் இருப்பது நாட்டுக்கும் நல்லது! உங்களுக்கும் நல்லது!

உபதேசம் வேண்டியதில்லை! உமது கையொப்பம், உடனே—தயங்காமல்...

என்னால் முடியாது அமைச்சரே!

முடியாது என்றால், பொதுத் தேர்தல்! மன்னரின் முறைகேடு பற்றி மக்களிடம் சொல்லுவோம்—ஆதரவு திரட்டுவோம்......

என் இயல்பு, இதற்கு இடம் கொடுக்காது, உங்களுக்கோ ஒரு ஊமை மன்னன் வேண்டும்!

குடி அரசு முறையால் அமைச்சரான உமக்கு, ஒரு சிறு துளி அதிகாரம் கொண்ட அரசனையும் சகித்துக்கொள்ள விருப்பமில்லை. குடிஅரசுக்குக் கட்டுப்பட்ட காவலன் வேண்டும், உமக்கு.

அதுதான்! சரியாகச் சொன்னீர், குடி அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் காவலன் வேண்டும்.

என்னால் அப்படி இருக்க முடியாதே!

எங்கள் முடிவு அது!

உங்கள் முடிவு நியாயமானது.

அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மகிழ்ச்சி! சரியான முடிவுக்கு வந்துள்ளீர்! இடும் கையொப்பம்!

உறுதிமொழியிலா? அது என்னால் முடியாதே! கட்டுப்பட்டுக் கிடக்க இயலாது!

கட்டுக்கு அடங்கும் மன்னன் தேவை என்ற எங்கள் முடிவு நியாயமானது என்று ஒப்பம் அளித்தீர்!

ஆமாம்! அதை மறுக்கவில்லையே! ஆனால் அப்படி நான் இருக்கமுடியாது என்கிறேன்.

அப்படியானால்...?

சிக்கலான நிலைமை! நான் மன்னனாக இருப்பதானால், நீங்கள் சொல்கிறபடி கட்டுண்டு கிடக்க முடியாது. எனவே ஓர் முடிவுக்கு வந்து விட்டேன்.

உறுதிமொழியில் கையொப்பமிடச் சம்மதம்......அப்படித்தானே......

இல்லை! உறுதிமொழியில் கையொப்பமிடக் கூடிய, மன்னனைத் தருகிறேன்......என் மகன்... உங்களின் இன்றைய இளவரசன்!

அப்படியானால், தாங்கள்?

நான் அரசப் பதவியைத் துறந்துவிடுகிறேன் என் மகன் மன்னனாவான், உம் விருப்பப்படி, உறுதி மொழி தருவான்......

காவலா! உம்மை இழக்கத்தான் வேண்டுமா?

வேறு வழி? சிக்கல் தீர நான் விலகுவது தான் முறை......

கூடிக் கலந்து பேச வந்தோம், பிரிவு உபசாரக் கூட்டமாகிவிட்டதே, இன்று.

உமது அன்புக்கு என் நன்றி!

கொள்கையால் நாம் பிரிகிறோம்—எனினும், உமது அறிவாற்றலை நாங்கள் மறவோம். இனிச் செல்ல வேண்டியதுதான, வெவ்வேறு வழியாக......

'ஏன், வெவ்வேறு வழி! நானல்லவா, உங்கள் வழிக்கு வந்துவிடத் தீர்மானித்துவிட்டேன்......

மன்னர் பதவியைத் துறந்து, பிறகு, யாது செய்ய வல்லீர், அரசே!

அரச பதவியில் இருக்கும்போது செய்ய இயலாததையெல்லாம் செய்திடலாமே......

என்ன கூறுகிறீர் வேந்தே!

என் பேச்சு முற்றுப் பெறவில்லை, அமைச்சரே!

நான் அரச பதவியைத் துறப்பேன்—என் மகன் உமது கட்டுக்கு அடங்கும் மன்னனாவான்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும், பெருவாரிக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து, அந்தக் கட்சியினர் ஆணையின்படி நடந்துகொள்வான். நான் பதவியிலிருந்து விலகுமுன், என் அதிகாரத்தைக் கொண்டு, எனக்குள்ள அரச குடும்பத்துக்கான தனி உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றை நீக்கிக்கொண்டு, சாதாரணக் குடிமகனாகிவிடப் போகிறேன்.

கொற்றவன், குடி மகனாவதா?

குடிமகனாவதற்காகத்தானே, நான் கொற்றவனாக இருக்கும் நிலையையே துறக்கிறேன்.

ஏன்? எதற்கு? என்ன செய்யத் திட்டமிடு கிறீர்?

உம்மோடு உறவாடி மகிழ! உடனிருக்க! அடுத்த பொதுத் தேர்தலில், சாதாரணக் குடி மகனாக ஈடுபட!

வெற்றி நிச்சயமல்லவா மன்னருக்கு!

எதிர்த்து எவர் போட்டியிடுவர்!

வெற்றி பெறக்கூடும்! ஏன்! நான் ஒரு கட்சி யைத் துவக்கி, தலைவனாகித், தேர்தலில் போட்டி யிடக்கூடும். இப்போது நான் மன்னன் என்று இருப்பதால், என்னைக் குற்றம் கூறிப்பேச உம் மால் முடியவில்லை. எனக்கும், மன்னனாக இருப் பதால், அமைச்சர்களின் அவலட்சணங்களை எடுத்துப் பேசமுடியவில்லை, குடிமகனானால், இரு வருமே தாராளமாக, காரசாரமாகக் கண்டனக் கணைகளை ஏவிக்கொள்ளலாம்...

இதெல்லாம் எதற்கு மன்னவா!

எதற்கா! என் கட்சி, மகத்தான வெற்றி பெற! உமது உறுதிமொழியில் கையொப்ப மிட்டுக் கட்டுண்டு கிடக்கும் காவலன், என் மகன், எந்தக் கட்சிக்கு அதிக இடம் கிடைக் கிறதோ, அந்த கட்சித் தலைவனை அழைத்து த்தானே அமைச்சர் அவை அமைக்கச் சொல்லி, அதன் ஆணைக்கு அடங்கி நடப்பான்! என் கட்சி அத்தகைய வெற்றி பெற்றால், என்னையே அழைத்து, அமைச்சர் அவை அமைக்கச் சொல் லக்கூடும்! குடிமகன் ஆகிவிட்டால், அமைச்சரே! கொற்றவனாக நான் இருக்கும்போது கிடைக் காத வாய்ப்பு, வலிவு, எனக்குக் கிடைக்கிறது!!

* * *

தம்பி! இந்த உரையாடல், அமைச்சர் அவையின ருக்கு அதிர்ச்சியை, அச்சத்தை, வெகுவாக, எப்படி ஏற்படுத்தாமலிருந்திருக்க முடியும்? ஏதேது இவன் அசகாயசூரன்! மன்னனாக இருப்பதாலாவது, இந்த அளவுக்குக் கட்டுப்படுகிறான்—இவன் குடிமகனாகி, கொற்றவனாக இருந்து அந்தப் பெரும் சிறப்பினையே துச்சமென்று துறந்த தியாகி, வீரன், மக்கள் தொண் டன் என்ற பெயரும் பெற்றுத், தேர்தலில் ஈடுபட் டால் எவரே அவனைத் தடுக்கமுடியும்! ஆட்சி அவன் கரம் செல்லும்! முடி அரசு, மகன் மூலம்! குடி அரசுத் தந்தை மூலம்! இதற்கு இடமளித்தால், நாம் யாரும் தலை தூக்கவே முடியாது—என்று எண்ணினர்— வியர்த்தனர்—வெடவெடத்துப் போயினர்.

முதலமைச்சர் ஒரு முடிவுக்கு வந்தார்.

மன்னா! அந்த உறுதிமொழிப் பத்திரம் எங்கே? என்று கேட்டார். நான் கையொப்பம் இடவேண்டிய பத்திரம்தானே; இதோ!—என்று கூறியபடி, பத்தி ரத்தை, மன்னன், தந்தான். முதலமைச்சர், அதைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தபடி, அமைச்சர் அவைக் கூட்டம் கலைகிறது!—என்று கூறிவிட்டுச் சென்றான்!!

* * *

தம்பி! மன்னன் என்னென்ன எண்ணிச் சிரித் திருப்பான், என்பதைக் கற்பனை செய்து பார்க்கப் பார்க்கச் சுவை சொட்டும் அல்லவா!

முடி அரசாகட்டும் குடி அரசாகட்டும், அதை நடாத்திச் செல்வோரின் திறமையைப் பொறுத்தே, அந்த முறைமூலம் பெறத்தக்க பலன், சுவை, கிடைக் கும். வெறும் முறையினால் மட்டும், போலிச்சுவை தான் கிடைக்கும்; காகிதப் பூவாகத்தான் இருக்கும்; கவர்ச்சி இருக்கும் வண்ணத்தால், மணம் கிடைக் காது.

கொற்றவனைக் குட்டிக் குட்டிக் குனிய வைக்கக் கிளம்பினான், குடி அரசு முறையைக் கருவியாக்கிக் கொண்டவன்; கூர்ந்த மதி படைத்த கொற்றவனோ, நான் குடிமகனாகிக் கோலோச்சும் பேறு பெற்றிருந்த போது இருந்ததைவிட ஏற்றத்துடன் இருந்திடுவேன், என்பதைக் குறிப்பிட்டுக் காட்டினான்—குடிமகனாக வேண்டாம்! கொற்றவனாகவே இருந்துவிடு!!—என்று கூறாமற் கூறிவிட்டுச் சென்றான், குடி அரசு முறை யால், தலைமை பெற்றவன்.

குடி அரசு, எல்லோரும் இந்நாட்டு மன்ற என்ற கொள்கையைத் தருகிறது.

அந்தக் கொள்கையைச் சாதகமாக்கிக்கொண்டு, எவரெவர் அந்த இடத்தைப் பெற்று, என்னென்ன செய்யக்கூடும் என்பதை எண்ணிப் பார்த்துத்தெளிவு தேடிப்பெறவே, இதுகுறித்து, பன்னிப் பன்னிச் சொன்னேன்.

தம்பி! முன்பு கொற்றவன் என்ற நிலையிலிருந்து கொண்டு, ஆதிக்கம் செலுத்த இருந்த வாய்ப்பதனை விட, இன்று குடிமகன் என்ற நிலையில் இருந்து கொண்டு, நல்லது செய்யவும், வாய்ப்பு அதிகம்; கேடு செய்திடவும் வழி கிடைத்துவிடுகிறது.

எனவே, மமதை, மந்தமதி எனும் கேடுடைக் குணம்கொண்ட மன்னன் நாடாள்வது, தீது தரும் என்பதால், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற ஏற் புடைய, குடி அரசுக் கோட்பாட்டை நிலைபெறச் செய்துவிட்டதாலேயே, ஆட்சியிலே சீரும், சிறப்பும், மக்கள் வாழ்விலே நலனும் தாமாக வந்து தழைத் திடும் என்று எண்ணிவிடுவது, பேராபத்து. முன் பாவது ஒருவர் மன்னர்! இன்று எல்லோரும் மன்னர் கள்! எனவே, எல்லோருக்குமே, ஆட்சி நடாத்தத் தக்க அறிவாற்றல் இருக்கவேண்டும், அதேபோது ஆணவம் இருத்தல் ஆகாது—திறம் இருக்கவேண்டும், தலைக்கனம் இருத்தலாகாது!

இந்தப் பண்புகள் உள்ள சில பலரிடம், சிலபல குறிப்பிட்ட காலத்துக்கு, ஆட்சிப் பொறுப்பை, ஒப் படைத்துவிட்டுப், பொதுமக்கள், உழவு, நெசவு, தொழில் தொண்டு, கலைகல்வி, களியாட்டம் எனும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டு, நல்வாழ்வு, முழு வாழ்வு பெறத்தக்க சூழ்நிலையைத் தக்கபடி ஆக்கிக், காத்து, அழிந்துபடாது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுத், தன்னல மறுப்புடன் நடந்திடும் பேராற்றல் வளர்ந்தால்தான் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற சுவைமிகு கொள்கை, பயன்தரும் முறையாகி நிற்கும்......... அதற்காகப் பணியாற்ற, எங்கோ, யாரோ, உளர், வருவர் என்று எதிர்பார்த்து நின்று, பிறகு இலவுகாத்த கிளியாகிப் போய்விட லாகாது. அதற்கான பணியாற்றும் கடமை, நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. மாநாடு:

மக்களின் நல்வாழ்வுக்கே அதிக அதிகாரங்கள் தேவை

எஸ். எஸ். தென்னரசு தலைமையுரை

'நாட்டிற்கு நல்லது செய்வதற்காக நாம் இன்னும் 'அதிகாரங்கள் வேண்டும்' சொன்னால் அதை, 'பிரிவினை வாதம்' என்கிறார்கள்.

'எதிர்க்கட்சியாக இருந்தபோதே பிரிவினை கேட்டவர்கள் நாம்! காங்கிரசார் நாடாண்ட நாளிலேயே பிரிவினை கேட்டவர்கள் நாம்! 'கட்டை விரலை வெட்டுவோம்' என்று காமராசர் சொன்னபோதே பிரிவினை கேட்டவர்கள் நாம்!

சேக் அப்துல்லாவைப் போலச் சிறையில் அடைப்போம்' என்று மிரட்டியபோதே பிரிவினை கேட்டவர்கள் நாம்!

'ஆனால் இப்போது அதிகாரம்—அரசெல்லாம் இருந்தும்கூட, 'பிரிவினை வேண்டாம்' என்று கூறி, 'மாநில சுயாட்சி தேவை' என்கிறோம்; உண்மையான அரசியல்வாதி இதைப் பாராட்டவே செய்வான்.

'கழகத் தொண்டர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன்—நம்மைத் தாக்கிப் பேசுவோரை நாம் விமர்சிப்பதைவிட, நம் கொள்கைகளையும் இலட்சியங்களையும் 'மக்களிடையே பெரும் அளவில் பரப்ப முனையவேண்டும்.

'ஏதாவது பெரிய போராட்டம் நடத்தமாட்டார்களா—கழக அரசைக் கவிழ்த்து விடலாமே' என்று எதிர்பார்க்கிறார்கள்; அவர்களைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்படாமல் கழகக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் நாம் குறிக்கோளுடன் இருக்கவேண்டும்.

'தமிழகத்தின் நல்லதோர் கேடயமாக இருக்கும் தி. மு. கழகம் தான். உண்மையான சோசலிசக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக—ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறது; உண்மையான காங்கிரசுக் கட்சியாக — உண்மையான கம்யூனிஸ்டாக — உண்மையான சோசலிஸ்டாக இன்றைக்கு விளங்குவது தி. மு. கழகமே ஆகும்; அக்கட்சிகளெல்லாம் அந்தக் கொள்கைகளை நிறைவேற்றத் தவறிவிட்டன''

—என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில், திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் சுட்டிக் காட்டினார்; அவர் மேலும் கூறியதாவது:-

'இன்று இந்த நாட்டில் மக்கள் ஆதரவை நிரம்பப் பெற்று விளங்குவது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்.

1967-ல் அரசு அமைத்து—மீண்டும் 1971-ல் அதைவிடப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றிருக்கிறோம்.

ஆனால் காங்கிரசின் நிலை அப்படியல்ல; 1947-ல் சுதந்தரம் பெற்றபோது அரசு அமைத்தது; ஆனால் 1952-ல் அதே காங்கிரசு ஆட்சி அமைத்தபோது, அது முன்பிருந்த பலத்தைப் பெற்றிருக்கவில்லை!

தி. மு. கழகம் அப்படியல்ல; 1967-ல் போட்டியிட்டு வென்றபோது பெற்றிருந்த பலத்தைவிட 1971-ல் அதிக பலத்தைப் பெற்றது!

இதற்கு என்ன காரணம்?—அறிஞர் அண்ணா அவர்களின் அடியொற்றி கலைஞரவர்கள் ஆட்சி நடத்தும் நிர்வாகத் திறமையல்லவா?

முன்பெல்லாம் காங்கிரசு அமைச்சர்கள் டில்லிக்குப் போவார்கள்; 'எதற்காகப் போகிறீர்கள்' என்று பத்திரிகைக்காரர்கள் கேட்டால், 'சும்மா' என்பார்கள்; திரும்பி வருவார்கள்......'என்ன சாதித்தீர்கள்' என்றால், 'பிரதமரைப் பார்த்தேன்' என்பார்கள்!

ஆனால் இன்று முதல்வர் கலைஞரோ—நாவலரோ-சட்ட அமைச்சரோ டில்லிக்குச் சென்றால், 'எதற்காகப் போகிறீர்கள்' என்று நிருபர்கள் கேட்டால், பதில் எப்படி வருகிறது?—'இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து வாதாடப் போகிறோம்; தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நமது மாநிலத்திற்கு அதிக நிதி தாருங்கள் என்று கேட்கப் போகிறோம் — அந்தக் கருத்தை வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறோம்—அதுபற்றி சட்ட மன்றத்திலும் விவாதிக்கப் போகிறோம்' என்கிறார்கள்!

இல்லாத அதிகாரத்தை யெல்லாம், 'இருப்பதாக'க் காங்கிரசு அமைச்சர்கள் கூறிவந்தார்கள்; அமைச்சர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் என்பது இப்போது தான் மக்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கிறது!

'இருக்கின்ற அதிகாரம் போதாது — மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமானால் இன்னும் அதிக அதிகாரங்கள் தேவை' என்கிறோம்—நாம்!

எதிர்த் தரப்பிலிருப்பவர்களோ 'அதிகாரம் இருப்பதால்தானே கருணாநிதி இதையெல்லாம் சொல்கிறார்' என்கிறார்கள்.

'இவ்வளவு குறைந்த அதிகாரம் இருக்கையிலேயே மக்களுக்கு இவ்வளவு நல்லதைச் செய்கிறோமென்றால், இன்னும், அதிக அதிகாரம் கிடைத்தால் எவ்வளவு செய்வோம் என்பதை யோசியுங்கள்' என்று முதல்வர் கலைஞர் அவர்களும் கூறினார்.

காங்கிரசுக் கட்சியின் இருபதாண்டுக் கால ஆட்சியில் நடந்த ஊழல்களை நாம் அம்பலப்படுத்த வேண்டும். நம்மைக் கேவலமாகப் பேசுவோர் யாரானாலும், அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட வேண்டும்; அப்போதுதான், 'இப்படிப்பட்டவர்களா அகில இந்தியத் தலைவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள்' என்று மக்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள்!'' *

பெறாத தாயைத் தேடி...

"உன் தாய்க்கு கேன்சர்!"

அண்ட சராசரங்களையும் தலை மீது வீசிவிட்டுப் போய்விட்டார் டாக்டர். என் தாய்க்கா? அதுவும் கர்ப்பப் பையிலாமே...ஓ,கடவுளே!

காலேஜுக்கு ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு தனிமையில் கண்ணீர் வடித்தேன். தம்பிகள் ராஜுவும், மோகனும், தங்கை கீதாவும் கவலைப்படக் கூடாதே என்று தைரியமாகச் சிரித்து — அப்படி நடித்து-அவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்தேன்.

வீடு வெறிச்சோடிக் கிடந்தது. "சரோஜியா? அவள் பொறுமையும், பதவிசும் யாருக்கு வரும்? குணத்தில் தங்கமாச்சே? உதவி கேட்டு வந்தவர்கள் யாரானாலும் வெறுங் கையோடு திரும்பிப் போகமாட்டார்களே, மகராசி!..." வாய்க்கு வாய் அம்மாவைப் புகழ்ந்து பேசினார்கள். "அம்மா... அம்மா! உன்னை நான் எப்படியம்மா விட்டுட்டுத் தனியாய் வாட முடியும்? ஆஸ்பத்திரியில் சேர்ந்து குணம் ஆகி சீக்கிரம் வாம்மா! எனக்கு இந்தத் தனிமை நெருப்பாய் எரிக்கிறது அம்மா!......" என்று கதறி அழ உள்ளம் துடித்தது.

பக்கத்து வீட்டு மன்னி எனக்குத் தேறுதல் சொன்னார்: "போஸ்ட் கிராஜுவேட் வகுப்பு படிக்கிற பெண்ணாகத் தெரியலையே ஜெயம், உன்னைப் பார்த்தால்? இப்படியா ஒரே யடியாக அழுது கொண்டிருப்பது? காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் கூடப் பல்லில் படவில்லையாமே? அம்மாவுக்கு ஒண்ணும் ஆகிவிடாதுடீ ஜெயா, அடையாறு கேன்சர் ஆஸ்பிடல் ரொம்பவும் பெயர் போனதுடீ! 'ரேடியம் ட்ரீட்மெண்ட்' கொடுத்து குணப்படுத்திவிடுவார்கள், கவலையை விட்டுட்டு இந்தக் காபியைக் குடி. முருகன் இருக்கிறான். அவன் நம்மைக் கைவிடமாட்டான்!..."

மன்னியின் பரிவான அணைப்பும், சொற்களும் தந்த தெம்பில் எழுந்து, மெல்ல வேலைகளைக் கவனித்தேன்.

நான் படித்த காலேஜில் பெரிய புரொபசர் ஆக வேலை பார்க்க வேண்டுமென்பது அம்மாவின் ஆசை. கெமிஸ்ட்ரியில் எம். எஸ். சி. முதல் வருடம் படிக்கும் நான் தைரியம் சிறிதுமில்லாத கோழை என்று வகுப்புத்தோழி சௌம்யா அடிக்கடி சொல்வாள். லாபரடரியில் ப்ராக்டிகல் செய்து கொண்டிருக்கும்போது இரசாயனக் கலவையின் ஆவியில் — திராவகங்

— ஜே. வி. நாதன் —

களின் புகையில் அடிக்கடி மயக்கம் போடுவது என் வழக்கம். அப்படிச் சமயங்களில் என்னைத் தன் மடிமீது போட்டு முகத்தில் நீர் தெளித்து ஒரு தாயின் பரிவோடு என்னை ஆசுவாசப் படுத்துகிற அவளது குணம், அவளை நான் மிகவும் நேசிக்கக் காரணமாக இருந்தது. சௌம்யா என் வீட்டுக்கு ஒரு தடவைவந்திருந்தாள். வற்புறுத்தி அவளை சாப்பிடச் செய்தாள் அம்மா. அம்மாவின் கலகலப்பான பேச்சும், அன்பான உபசரிப்பும் சௌம்யாவின் நெஞ்சைத் தொட்டன. "டேய் ஜெயா! நீ ரொம்பக் கொடுத்து வைத்தவள்டீ, உன் மதரை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!..." என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சிறுகதை!

இரண்டு மாதத்துக்கு முன்பு தொடங்கி அடிக்கடி அம்மாவுக்கு அந்த வயிற்றுவலி வந்தது. அம்மாதிரி சமயங்களில் அம்மா துடியாய்த் துடித்துவிடுவாள். ஒரு முறை நடு இரவில் வயிற்று வலி வந்து அம்மா படுக்கையில் புழுவாய்த் துடித்துப் புரண்டபோது அப்பாவும் வீட்டில் இல்லாத சமயம்—ஆண் பிள்ளையைப் போல நான் வெளியே ஓடி டாக்ஸி ஒன்றைப் பிடித்து வந்து அம்மாவை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ற சமயத்தில் அறிமுகம் ஆகி —அதற்குப் பிறகு எங்கள் குடும்பத்துக்கு தன்னலமின்றி உழைத்து —குடும்பத்திலேயே ஒருவராக ஆகிவிட்டவர்தான் நாதன்.

டாக்ஸி டிரைவர்! பட்டப் படிப்பை முடித்துவிட்டு, வேலை கிடைக்காமல்—கிடைக்கும் வரை காரோட்டிப் பணி புரிவதில் எந்த இழிவும் இல்லை என—வாடகைக் கார் ஒன்றின் டிரைவராக வேலை பார்க்கும், நல்லவர்!

"அண்ணா! ... அண்ணா!" என்று நானும், தங்கை-தம்பிகளும் பாசத்தோடு அழைப்போம். 'துன்பத்தில் உதவுபவர்கள்தான் உண்மையானவர்கள்' என்று சொல்வார்கள். ஆபத்து நேரங்களில், கவலைப்படும் சந்தர்ப்பங்களில் எப்படித்தான் நாதன் அண்ணாவுக்கு மூக்கில் வியர்க்குமோ தெரியாது — சிரித்துக்கொண்டே வந்து நிற்பார். அவர் வந்தாலே எனக்கு யானை பலம் வந்த மாதிரி.

அம்மாவை சென்னைபுற்றுநோய் மருத்துவ மனைக்கு அப்பா அழைத்துச் சென்று, சிகிச்சை முடியும்

வரை அங்கேயே 'பெட்'டில் இருக்கும்படி ஆகிவிட்ட சமயம், வீட்டு வேலைப் பொறுப்புகள் யாவும் என் தலைமீதும் — விவரம் தெரியாத தங்கை, தம்பிகள்மீதும் விழுந்தன. காலையில் சமையலை முடித்துவிட்டு, அவசர அவசரமாக சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி, பஸ் ஸ்டாப்புக்குஓடி.நெருக்கியடித்துகொண்டு கல்லூரி பஸ்சில் தொற்றிக்கொண்டு வகுப்பில் போய் அமர்வதும், ஆசிரியர் கூறுபவைகளைக் கவனிக்கவேண்டிய சமயத்தில், இன்று அம்மாவுக்கு ஆபரேஷன் என்று அப்பா கடிதம் போட்டிருந்தாரே முருகா! அம்மாவுக்கு சீக்கிரம் குணமாக வேண்டும்...என்று கவலைப்படுவதும். நாளை, சமையலுக்கு காய்கறிகள் தீர்ந்து விட்டதே சாயங்காலம் குழத்தைகள் பள்ளி விட்டு வந்ததும் வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மார்க்கெட்டுக்குச் செல்லவேண்டும் என்று வீட்டு யோசனைகளில் ஆழ்வதும்......

"ஒரு கவலைகளும் அணுகாமல் இன்னொருவர் சமைத்துப் போட்டுச் சாப்பிட்டு வாழ்க்கையை ருசிக்க வேண்டிய இளம் வயதில் இப்படி பாரங்களைச் சுமக்க வேண்டியது உன் தலைவிதியம்மா... என்ன செய்வது?" என்று நாதன் அண்ணா கவலையோடு கூறுவார். அவருக்கு ஒய்வு கிட்டும் போதெல்லாம் வீட்டுக்கு வருவார்.

"லேட்டஸ்ட் மருந்துகள் எல்லாம் இந்தியாவுக்கு வந்திருக்கு தெரியுமா ஜெயா? இப்போதெல்லாம் புற்றுநோய் மிகச் சாதாரண வியாதியாகி விட்டது... நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் பிழைத்து விடுகிறார்கள்!" என்று எனக்கு தைரியம் அளிப்பார். "அண்ணா! நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் பிழைப்பதாகக் கூறினீர்களே, செத்துப் போகும் பத்துப் பேர்களில் என் தாயும் இருந்து விட்டால்...?', என்று அழுதுகொண்டே கேட்டபோது என்வாயைச் சட்டென்று பொத்தி கண்ணீரைத் துடைத்துச் சொன்னார் அண்ணா, "ஜெயாம்மா, அழாதே! முருகன் நம்பினவர்களைக் கைவிடமாட்டான், தங்கத்தைத் தான் உரசிப்பார்ப்பார்கள். அதேபோல நல்லவர்களைத் தான் இறைவன் மிகவும் சோதிப்பான்!..."

"நம்பினவர்களை முருகன் கைவிடமாட்டான்!..." என்ற அண்ணாவின் வார்த்தைகளில் எனக்கு அமைதி ஏற்பட்டது. கூடத்து சுவரில் வேலும் மயிலும் அபயக் கரமும் முறுவலுமாக நிற்கிற முருகனை கண்ணீர் விட்டு அழுது தொழுது வந்தேன்.

கடைசியில் முருகன் ஏமாற்றி விட்டான்! ஒருநாள் காலை அம்மா யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

தாயற்ற குழந்தைகளாக எங்களைத் தவிக்க விட்டு தெய்வம் ஆகி விட்டாள் என்னைப் பெற்றவள். அம்மா! அம்மா! நீ எங்கேயம்மா போனாய்? என்னையும் அங்கே அழைத்துச் சென்று விடு அம்மா!...

கெமிஸ்ட்ரி லாபரடரியிலிருந்து 'சயனைட்' கொஞ்சம் எடுத்து வந்திருந்தேன். இந்த உலகின் துயர்களில் இருந்து விடுவித்து என்னை என் தாயிடம் கொண்டு சேர்க்கும் மருந்து என அந்த விஷத்தை நான் யாருக்கும் தெரியாமல் கைப்பையில் வைத்து எடுத்து வந்திருந்தேன்.

என்கைப்பையைத் துழாவி அதைக் கண்டுபிடித்தவர் அண்ணா தான்! "என்ன பைத்தியக்காரத்தனம் செய்ய இருந்தாய் ஜெயா? உன்கவலைகளைப் பெரிதாக எண்ணி விட்டாயே—உன்னை விடச் சிறிசுகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை அம்மா உன்னிடம் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். நீ என்னடா வென்றால்...?"

இனி அம்மாதிரி பைத்தியக்காரத்தனம் செய்வதில்லை என்று அண்ணா என்னிடம் மறைந்து போன அம்மாவின் மேல் ஆணை வைத்து உறுதி வாங்கிக் கொண்டார்.

அம்மா இல்லாத உலகம் பாலைவனமாகத் தெரிந்தது. கையில் தேங்காய் எண்ணெயைக் குழைத்து என் கேசத்துக்குப் பூசி, அழகாய் பின்னி விடுவாளே, காலேஜிக்குப் பறக்கிற போது "அவசரம் என்ன? நிதானமாச் சாப்பிடும்மா," என்று பக்கத்தில் உட்கார்ந்து என்னைச் சாப்பிட வைப்பாளே, காலேஜிலேருந்து வரநேரம் ஆகிவிட்டால் வாசலில் கடைசிப்படியில் இறங்கி தெருக்கோடியில் என் தலை தெரிகிறதா என்று கண்பூக்கும் அளவுக்கு வெறித்துப் பார்த்துக் கொண்டே நிற்பாளே...அம்மா!...என் தெய்வமே! ஆவேசத்தோடு கதறித் துடிக்க வேண்டும் என்று பதறுகிற நேரங்களில் வகுப்புத் தோழி சௌம்யாவின் அன்பு—பக்கத்து வீட்டு மன்னியின் பாசம், மன்னியின் குழந்தைகளது அறிவும் சுட்டித் தனமும் என்னை மாற்ற உதவி செய்யும். மிகுதி பெரும் அளவு எனது கவலைகளைப் போக்கியவர் அண்ணா.

"அண்ணனாம் அண்ணன்! நல்ல நாடகம்டீயம்மா கூடப் பொறந்தவனா என்ன? கலிகாலம் ... என்னென்ன கூத்துக்கள்—கோலங்கள் நடக்கணுமோ எல்லாம் நடந்து தானே தீரும்?"—இப்படி எங்கள் தூய்மையான உறவுக்குக் களங்கம் சுமத்திப் பேசியவர்களும் இருந்தார்கள்.

அதுதானே உலகம்—சமூகம்.

கட்டின புருசன் கிராமத்தில் நிலத்தில் பாடுபட்டு உழைக்கிற அவனது செல்வம் வேண்டும்; உழைப்பினால் கறுத்துப் போன அவனுடைய உடம்பு தேவையில்லையென்று அவனை வீட்டில் கூட சேர்க்காத 'நாகரீக' செண்பகம் மாமி: சாயுங்காலம் ஆனதோ இல்லையோ, பட்டுப்புடவையும் தலைகொள்ளாத மல்லிகைப் பூவும் முகத்தில் பவுடரும் இவ்வளவும் போதாது என்று செண்ட்டும் பூசிக்கொண்டு செண்பகம் கிளம்பிவிடுவாள்கதாகாலட்சேபம் கோவில் என்று பக்தியோடு போவதாக பீற்றிக் கொள்வாள். அவளுக்கும் அவளைப் போன்ற வேலையற்ற 'நாரீமணி'களுக்கும் சிறிது 'அவல்' கிடைத்தால் போதாதா—மென்று தீர்க்க!

நாதன் அண்ணா வீட்டுக்கு வருவார். ஒய்வு நேரங்களில் என் நோட்ஸ்களை எழுதித் தருவார். வீட்டில் யாருக்காவது உடல் நலமில்லை யென்றாலும் பதறி டாக்டர் வீட்டுக்கு அழைத்துப் போவார். "தேர்வு நேரம் ஆயிற்றே—நீ படியம்மா. நான் கடைத் தெருவுக்குப் போய் சாமான்கள் வாங்கி வருகிறேன்!" என்று கிளம்புவார். குத்தகைக்காரன் நெல் அளக்கவில்லை — தகராறு செய்கிறான் என்று சொன்னால் தன் வேலைகளை விட்டு விட்டு அலைவார்...

ஒரு நாள் கல்லூரிக்கு நான் போகும் வழியில் யாரோ நாலைந்து காலிகள் நின்று கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு வாரமாக அது தொடர்ந்தது. பொறுத்துப் பார்த்த நான் அண்ணாவிடம் சொல்லி வைத்தேன். அவர் என்ன

செய்தாரோ, அதற்குப் பிறகு நிம்மதியாக கல்லூரிக்கு நான் சென்று வர முடிந்தது.

கல்லூரியில் ஏதேனும் விழா—நிகழ்ச்சிகள் — பார்ட்டி—என்றால் இருட்டிய பின்தான் முடிவடையும். அதன் பின் வீடு திரும்ப பஸ் கிடையாது. தனியே திரும்பி வருவதென்றால் பின்னாலேயே கீழ்த்தரமான சினிமாப் பாட்டுகளையும், மட்டமான 'விட்'களையும் உதிர்த்தபடி வரும் காலிக் கும்பல் பற்றிய அச்சம்...இந்த பயத்தைப் பற்றி பேச்சிற்கிடையே ஒரு தடவை அண்ணாவிடம் குறிப்பிட்டிருந்தேன். அதற்கப்புறம் காலேஜில் விசேட நிகழ்ச்சிகளுக்குப் போவதென்றால் நான் கவலைப்படுவது கிடையாது; ஏன் என்றால் எனக்குத் துணையாக அண்ணா வந்திருப்பார், வீடு வரை எனக்குப் பாதுகாப்பாக என்னுடனே வந்து விட்டுவிட்டுச் செல்வார்.

"புருசன் பெண்டாட்டி மாதிரி ஜோடியாக வர்றதைப் பார்த்தியாடீ...கலிகாலம்!..." என்று காதுபடவே செண்பகம் மாமி பேசுவாள். எங்கள் மனதில் மாசு இருந்தால் அன்றோ ஊர் வாயைப் பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டும். ஆனால் அண்ணாவின் தூய மனம் இதைக் கேட்டு வருந்தக்கூடாதே என்றுதான் அஞ்சுவேன்.

சமூகம் என்பது இப்படிப்பட்ட கறைகள்தானா? தூய்மையான உறவுக்கு பழி கற்பித்துப் பேசி, அந்த உறவினைக் கலைத்திடும் சதிதானா?

"அண்ணா! உங்களையும் என்னையும் சேர்த்து தவறாகக் கதை கட்டி விடுகிறார்களே சில பாவிகள்...?" என்று வேதனையோடு நான் கூறிய போது "இஸ் இட்?" என்று அதிர்ந்து இடிந்துபோய் உட்கார்வார் அண்ணா என நினைத்த நான் ஏமாந்து போனேன்.

அவர் அழகாய்ச் சிரித்தார்.

"ஜெயா! பச்சைக் கண்ணாடியைக் கண்ணில்போட்டுக்கொண்டு பார்ப்பவர்களுக்கு பார்க்கிற பொருள்களின் உண்மை நிறம் எவ்வாறு தெரியாதோ — அதே போலத்தானம்மா இவர்களும்! இன்னொருவர் நலனில் அக்கறையில்லாதவர்கள் நாக்கில் நரம்பு இன்றி, பேச்சுகளில் ஒரு வரம்பும் இன்றிப் பேசுவது இந்த சமுதாயத்துக்குக் களை போன்ற விஷயம். களைகள் எடுக்க எடுக்க வளர்வதில்லையா—அதைப் போன்று சமுதாயப் பயிருக்குக் களைகளான இவர்களும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். என்ன செய்வது?

"உடன் பிறந்தால்தான் பாசம் வரும் என்பது இவர்களின் கூற்று. வளர்ப்பால், பிணைப்பால், சிநேகத்தால், அந்தரங்கத்தால் அது ஏற்பட முடியாதா? இரத்தத்துடன் பிறக்கிற சகோதரத்துவத்துக்கு மட்டும்தான் பாசம் உண்டு எனில், உலகில் மனித சமுதாயத்திடம் எப்படியோ—எங்கோ ஏற்படுகிற அந்தப் பாசத்துக்கு அர்த்தம் கூற முடியுமா?...இரத்தக் கலப்பில்லாத நேசம் வளரவே முடியாதா?......ஏனம்மா இவர்களுக்கு இதெல்லாம் புரியவில்லை?..."

அண்ணாவின் வேதனையான பேச்சைக் கேட்டு என் உள்ளம் கசிந்துருகும். எப்படியோ அண்ணா என்கிற மாமலை எனக்குத் துணையாக இருக்கிறது என்கிற தைரியத்துடன் இருந்தேன்.

இப்போது—

ஒரு கவலைப்படும்படியான சம்பவம் நடந்திருக்கிறது.

"அண்ணா...அண்ணா" வென்று ஊரை எதிர்த்துக்கொண்டு பழகினேனே — என் வாழ்க்கையின் பெரிய நம்பிக்கைகளும் — பலங்களும் அவர்தான் — அவர்தான் என் வாழ்க்கையின் பற்றுக்கோடு என நம்பி என்னை அவரில்லாமல் வாழப் பழகிக் கொள்ளாமல் இருந்தேனே—அந்த என் நாதன் அண்ணா என்னை விட்டு எங்கோ சென்றுவிட்டார்.

நாக்கில் நரம்பும் — பேச்சில் வரம்பும் இல்லாத சமுதாயத்தின் 'களை'களை அகற்ற முடியாமல், அந்தக் களைகளுக்கே பலியாகி விட்டார் அண்ணா யாருடைய அவதூறோ அவருடைய மென்மையான — உணர்ச்சிவசப்படும் இதயத்தைப் புண்படுத்தியிருக்கிறது.

சகோதரி!

தூய்மையான நட்புக்கு இந்த உலகில் இடம் கிடையாது. உன்னுடைய எதிர்காலத்தில் நீ ஒரு நல்ல கணவனை மணந்து கொள்ளும் சமயத்தில் என்னுடைய நட்பால் பரவிய அவதூறுகள் இடையூறாக அமைந்து விடக் கூடாது என்றுதான் உன்னை விட்டுப் பிரிகிறேன்.

எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும், மண்ணில் முளைத்த செடிகள் தானே நாம்; அந்த மண்ணுக்குரிய இயல்புகள் நம்மிடம் விளைந்திருக்கத்தானே செய்யும். என்னை மன்னித்து விடு உன் ஏழை அண்ணாவை மன்னித்து விடம்மா"

நான் அழுது கொண்டேயிருக்கிறேன், அண்ணா! ... அண்ணா!... என்னை விட்டு எங்கே சென்று விட்டீர்கள்? நீங்கள் இல்லாமல் எப்படி அண்ணா நான் உயிருடன் இருக்க முடியும்? அம்மா மறைந்த பிறகு அந்த அம்மாவின் ஸ்தானத்தில் நீங்கள் இருந்து எங்களைக் குழந்தைகளாகப் பாவிப்பதாகச் சொல்வீர்களே உடன் பிறக்காத சகோதரனாக — எங்களைப் பெறாத தாயாக—ஓ! அண்ணாவே! நான் கல்லூரிக்குச் சென்றாலும் என் அழுகைதான் தொடர்கிறது. நீங்கள் இல்லாமல் வாழ என்னை நான் இன்னும் பழக்கிக் கொள்ளவில்லையே!...

சௌம்யா என்னை அசடு அசடு என்கிறாள், நான் அசடுதான் அண்ணா. வாழ்க்கையில் இன்பம் என்பதைச் சிறிதும் அறியாமல்—இத்தனை இளம் வயதிலேயே பெற்றதாயையும்-பெறாத தாயையும் இழந்துவிட்டு இன்னும் உயிரோடு வேறு இருக்கிறேனே-நான் அசடு இல்லாமல் வேறென்ன?

அண்ணா! இந்தப் பத்திரிகையை நீங்கள் எங்கிருந்தாலும் படிப்பீர்கள் என்பதால் என் வாழ்வை—குமுறலைக் கதையாகவே எழுதி விட்டேன். இதை ஆசிரியர் பிரசுரிக்கிற அளவுக்கு நான் எழுதத் தெரிந்தவளாக எனக்கு எண்ணமும் இல்லை இந்த அநாதையின் மீது இரங்கி ஆசிரியர் ஒருவேளை பிரசுரித்து—நீங்கள் படிக்க நேர்ந்தால், எங்கிருந்தாலும் உடனே வாருங்கள் அண்ணா! செண்பகம் மாமியைப் போன்ற நாக்கில் நரம்பும், பேச்சில் வரம்பும் இல்லாதவர்களுக்காகப் பயந்து கொண்டு என்னைப் போன்ற தாயில்லாத அபலைகளை மேலும் கண்ணீர் சிந்த வைக்காதீர்கள்... உடனே ஓடிவாருங்கள்! என்னால் அழக்கூட முடியவில்லை.

ஏன் என்றால்—
இனியும் அழுவதற்கு—
என்கண்ணில்—
நீர் இல்லை!

★

தனி நாடு கேட்கவில்லை;

உரிமைகள் காக்கப்படவே 'சுயாட்சி' கோருகிறோம்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக மாநாட்டில் பேராசிரியர் க. அன்பழகன் தெளிவுரை

"திராவிட முன்னேற்றக் கழகம், சனநாயகத்தின் பாதையில் நடைபோடுகிறது; மக்களுக்கு நல்வாழ்வு தர அரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது; எனவே தான், அன்று நாம் முன்வைத்த திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் காட்டிலும் அதிக நன்மைகளை சனநாயக ரீதியில் பெற, 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்' என்று கோருகிறோம்.

"இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராத அளவிலான முறையில் தமிழ்மக்களின்உரிமை காக்கப்படவேண்டும்—என்று சுயாட்சி கேட்கிறோம்.

"நாம் தனிநாடு கேட்கவில்லை; இதைப்பற்றி அண்ணா அவர்களே கூட-அவர்கள் ஓயாமல் உழைத்து பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில்—திறமையுள்ள கலைஞரிமுடம், பொறுமையுடைய நாவலரிடமும் அடக்கத்தோடு பணியாற்றுகின்ற தோழர்களிடமும் மாநில சுயாட்சி உயிலைத் தந்தார்!

"அண்ணா விரும்பிய மாநில சுயாட்சியைத்தான் நாம் விரும்புகிறோம்! அண்ணா விரும்பாத எதையும் எப்போதும் செய்ய நாங்கள் விரும்பியதில்லை!

அண்ணாமீது ஆணையாக நாங்கள் பிரிவினையை விரும்பவில்லை; அண்ணா விரும்பாத எதையும் நாங்கள் விரும்பமாட்டோம்!"

என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. 5-வது மாநாட்டில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

"இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராதவண்ணம்—பிரிவினை அற்ற முறையில்—நம் மாநிலத்துக்கு சுயாட்சி பெறுதல் வேண்டும் என்று நாம் மாநில சுயாட்சிக் கோரிக்கையை விடுத்திருக்கிறோம்.

இந்தத் தமிழ் மண்ணில் ஆற்றல் மிக்க தளபதியாக — வீர மறவராகக் கலைஞரவர்கள் இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தக் குரலுக்கு அஞ்சி எதிர்த் தரப்பினர் இக்கோரிக்கையைத் தவறான போக்கில் திசை திருப்பி விட முற்பட்டிருக்கின்றனர்!

மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் 'பிரிவினை' என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்!

1947-ல் வெள்ளையன் சுயராஜ்ய அரசு தந்தபோதே, தமிழ் நாட்டுக்கு வாழ்வு கோரத் தொடங்கப்பட்டு விட்டது!

பெரியார் அவர்கள் இதுபற்றிக் கருத்து அறிவித்தபோது' அண்ணா அவர்கள், அன்று தமிழன் வாழ—தமிழினம் முன்னேற அகில இந்திய அளவில் முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தந்த நாட்டில்—அந்தந்த மக்களின் — மொழியின் —உரிமைகளைக் காத்துக்கொள்ளும் வகையிலான கருத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

நாம் கேட்கின்ற மாநில சுயாட்சிக் கோரிக்கையை அண்ணாவோ—கலைஞரோ உருவாக்கியது அல்ல; இந்தக் கருத்து காந்தியார் அவர்களால் பேசப்பட்டதாகும்; நாம் கேட்கும் சுயராஜ்யம் வெள்ளையனை வெளியேற்றுவதால் மட்டும் வந்துவிடாது' என்று ஒருமுறை காந்தியார் குறிப்பிட்டார்; 'உண்மையான மக்களாட்சி அமைவதே சுயராஜ்யம்; கிராமந்தோறும் கிராம ராஜ்யம் அமைய வேண்டும்' என்றார்.

"இந்தியாவின் மொத்தவளர்ச்சி அவசியமே; அதே சமயத்தில் ஒவ்வொரு மாநிலமும் அதன்தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள அவசியமான உரிமைகள் தரப்பட வேண்டும்" என்றும் காந்தியார் வற்புறுத்தினார்.

அதைத்தான் நாம் இப்போது வற்புறுத்தி வருகிறோம்.

மாநில சுயாட்சிக் கோரிக்கை, இந்திய ஒற்றுமைக்கு உரம் தரும் கோரிக்கை-ஊறு தரும் கோரிக்கை அல்ல!"

★

அறிவிப்பு

வினா - விடைப் பகுதிக்கு வாசகர்களது வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும், பண்பாடுள்ளனவாகவும் இருக்கவேண்டும். அஞ்சல்அட்டையில் எழுதினாலே போதுமானதாகும்.

— ஆசிரியர்.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
[illegible] தெரு, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.